செய்தி வெளியீடு எண்:1019 நாள்:02.11.2021

<u>செய்தி வெளியீடு</u>

**வேலூர் மாவட்டம், மேல்மொணவூரில் நடைபெற்ற அரசு விழாவில், புலம் பெயர்ந்த இலங்கை தமிழர்களுக்கு 3510 புதிய குடியிருப்புகள் மற்றும் முகாம்களில் அடிப்படை திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டி, முகாம்வாழ் தமிழர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள் நலன் தொடர்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 27.8.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், இலங்கைத் தமிழர்களது முகாம்களில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள வீடுகள் கட்டித்தரப்படும், முகாம்களின் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும், ஆண்டுதோறும் இலங்கைத் தமிழர் வாழ்க்கைத் தர மேம்பாட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்படும், பொறியியல் / வேளாண் / முதுநிலை பட்டப்படிப்பு மாணவ, மாணவியருக்கு கல்வி மற்றும் விடுதிக் கட்டணம் வழங்குதல், வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி, சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி மற்றும் சமுதாய முதலீட்டு நிதி, மாதாந்திர பணக்கொடை உயர்வு போன்ற பல்வேறு திட்டங்களை அறிவித்தார்.

அதனை செயல்படுத்தும் விதமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (2.11.2021) வேலூர் மாவட்டம், மேல்மொணவூரில் நடைபெற்ற அரசு விழாவில், புலம் பெயர்ந்த இலங்கை தமிழர்களுக்கு ரூ.142.16 கோடி மதிப்பீட்டில் 3510 புதிய குடியிருப்புகள் மற்றும் ரூ.30 கோடி மதிப்பீட்டில் 78 முகாம்களில் குடிநீர், மின்சாரம், சாலை வசதி போன்ற அடிப்படை திட்டப் பணிகள் ஆகிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மேலும், முகாம்வாழ் தமிழர்களுக்கு, 58,747 நபர்களுக்கு 12.41 கோடி ரூபாய் உயர்த்தப்பட்ட பணக்கொடை, 58,677 நபர்களுக்கு 4.52 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இலவச கைத்தறி துணிமணிகள், 18,890 குடும்பங்களுக்கு 2.42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஐந்து வகையான எட்டு எவர்சில்வர் பாத்திரங்கள், 18,890 குடும்பங்களுக்கு 8.66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இலவச எரிவாயு உபகரணங்கள் மற்றும் மானிய விலையில் 5 எரிவாயு உருளைகள், 5000 நபர்கள் பயன்பெறும் வகையில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் உபகரணங்கள், பொறியியல், வேளாண் / வேளாண் பொறியியல், முதுநிலை

மாணவ, மாணவியருக்கு 3.10 கோடி ரூபாய்க்கான கல்வி மற்றும் விடுதிக் கட்டணத்திற்கான காசோலைகள், 940 மாணவ, மாணவியர்களுக்கு 1.25 கோடி ரூபாய்க்கான உயர்த்தப்பட்ட கல்வித் உதவித் தொகை, 621 சுயஉதவிக் குழுக்களுக்கு 6.15 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி, 106 முகாம்களுக்கு 5 கோடி ரூபாய் வாழ்க்கை தர மேம்பாட்டு நிதி, 19 இலட்சம் ரூபாய் செலவில் இலவச அரிசி, என மொத்தம் 225 கோடியே 86 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் திட்டத்தையும், வழங்கி தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, மேல்மொணவூர் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமினை நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்து, அங்குள்ள இலங்கைத் தமிழர்களிடம் வசதிகள் குறித்து கேட்டறிந்தார். மேலும், முகாமில் உள்ள அங்கன்வாடி மையத்தை பார்வையிட்டு, ஆய்வு செய்து, குழந்தைகளுக்கு இனிப்புகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர். காந்தி, மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ். மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ். ஜெகத்ரட்சகன், திரு.து.மு. கதிர் ஆனந்த், திரு. கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஏ.பி. நந்தகுமார், திரு.பா. கார்த்திகேயன், திருமதி அமலு விஜயன், திரு.ஜெ.எல். ஈஸ்வரப்பன், திரு.ஏ.சி. வில்வநாதன், திரு.கே. தேவராஜ், முன்னாள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுத்துறை செயலாளர் முனைவர் டி. ஜகந்நாதன், இ.ஆ.ப., மறுவாழ்வு மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நல ஆணையர் திருமதி ஜெசிந்தா லாஸரஸ், இ.ஆ.ப., வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பெ. குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

••••••••

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9